அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
New No.46,Old,No.4,Ramakrishna Street,
(North Usman Road)T.Nagar,Chennai-6000117.
044-28143306 / 28143307 / Fax 42124624
www.aismk.in



# *ரணில்விக்ரமசிங்கே பதவியேற்றபின் தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் மத்திய அரசின் நடவடிக்கை தேவை!..*
# *சரத்குமார் எம்.எல்.ஏ அறிக்கை*

*அ.எண் :204/2015*
*தேதி :25/08/2015*

*தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை மீண்டும் தாக்குதல் நடத்தியுள்ளது மிகவும் கண்டிக்கத்தக்கது. இந்த முறை அநாகரிகமான தாக்குதல் நடைபெற்றுள்ளது. மீனவர்களைத் தாக்குதல், படகுகளை சேதப்படுத்தல் போன்ற கொடுமைகளைத் தாண்டி மீனவர்களின் ஆடைகளை அவிழ்த்து அசிங்கப்படுத்தியிருப்பது தமிழர்களுக்கு இழைக்கப்படும் உச்சகட்ட அவமானம், மீனவர்கள் தங்கள் வலைகளை அறுத்தெறிந்து விட்டு உயிர் பிழைக்க தப்பித்து வந்திருப்பது மிகவும் சோகமான நிகழ்வு.*

*எல்லை தாண்டி வரும் தமிழக மீனவர்களை சுடுவோம், என்று ஏற்கெனவே இலங்கை பிரதமர் ரணில் விக்ரமசிங்கே அறிவித்து அதை அனைவரும் கண்டித்துள்ளார்கள்.*

*அவரே இப்போது மீண்டும் புதிதாக பதவியேற்ற பின் கடற்படை தாக்குதலுக்கு நம் மீனவர்கள் ஆளாகி இருப்பது பல ஐயங்களை எழுப்புவதாக உள்ளது. கச்சத்தீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது இச்சம்பவம் நடந்துள்ளது. தமிழக மீனவர்கள் தங்கள் பாரம்பரிய மீன் பிடிப் பகுதிகளை விட்டு விட்டு எங்கே செல்ல முடியும்?.*

*மத்திய அரசு இந்த பிரச்சனையை தொடர்ந்து மிதமாக எடுத்துக் கொண்டுள்ளது. ஒவ்வொரு முறையும் பேச்சுவார்த்தை மட்டுமே நடைபெறுகிறது என்பதைத் தவிர தற்போதைய நிலையில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. கச்சத்தீவை மீட்டால் மட்டுமே நம் மீனவர்களுக்கு தொழில் பாதுகாப்பு ஏற்படும் என்பது உறுதி. மத்திய அரசு இதற்காக வேண்டிய நடவடிக்கைகளில் ஈடுபட்டு நம் மீனவர்களின் வாழ்வுரிமையை காக்க வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறேன். தமிழக மீனவர்களுக்கு இழைக்கப்படும் அநீதி இனியும் தொடராதிருப்பதை மத்திய அரசு உறுதிப்படுத்த வேண்டும் என்றும் சமத்துவ மக்கள் கட்சி சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.*

நன்றி, வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்,
*தூய்மை,எளிமை,நேர்மை,*
*என்றும் அன்புடன்,*



*ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ*
*தலைவர்*